# Gospel Truth

# காஸ்பெல் ட்ரூத்

உலகளாவிய திருச்சபைகளை ஊக்குவிப்பதற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 29 – International Editor : MICHAEL W.SMITH – இதழ் - 29


## மரணம் என்கிற சாபம்

ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார் – ஆதி 2 : 17.

ஆதியிலே தேவன் அழகான ஏதேன் தோட்டத்தை படைத்து, அதில் சஞ்சரிக்கும் படியாக ஆதாமையும், ஏவாளையும் படைத்தார். அவர்கள் அதைப் பண்படுத்தவும், காக்கவும் தேவன் அவர்களோடு உறவாடும்படியாகவும் வைத்தார். தேவனாகிய கர்த்தர் பார்வைக்கு அழகும், புசிப்புக்கு நலமுமான சகலவித விருட்சங்களையும் பூமியிலிருந்து முளைக்கப் பண்ணினார் (ஆதி 2 : 9). ஆதாமும் ஏவாளும் அந்த ஜீவவிருட்சத்தின் கனியைப் புசித்திருந்தால் அவர்களுடைய ஆரோக்கியமும், ஆயுளும் காக்கப் பட்டிருக்கும்.

ஏனெனில் தேவன் அவர்களுக்குள் என்றென்றும் அழியாத ஜீவ ஆத்துமாவை கொடுத்திருந்தார். மேலும் நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனியைப் புசிக்க வேண்டாம் என்றும் கட்டளையிட்டார். தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாததின் விளைவு மரணம்.நல்லொழுக்கமுள்ள மனுக்குலத்தை உருவாக்கவே அன்பின் வெளிப்பாடாக மனிதனுக்கு எல்லாவற்றையும் அனுபவிக்க அதிகாரம் கொடுத்தார்.ஆனால் மனிதனோ தவறினான்.

அந்த விருட்சத்தின் கனியை புசித்தநாளிலே இருவருடைய கண்களும் திறக்கப்பட்டது. அப்போதுதான் நன்மை, தீமை அறியத்தக்கவர்களானார்கள் (ஆதி 3 : 6-7). தேவன் படைத்தபோது மனிதனிடம் இருந்த நல்ல குணாதிசயங்கள் அவனைவிட்டு எடுபட்டு போயிற்று.கீழ்ப்படியாமைக்கு முன்பதாக ஆதாமும் ஏவாளும் நிர்வாணிகளாயிருந்தும் வெட்கப் படாதிருந்தார்கள்.

இன்றும் என்றும் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய வேண்டும்.கீழ்ப்படியாமையில் ஏதேன் தோட்டத்திலே மரணமாகிய சாபம் வந்தடைந்தது. இதின் விளைவு இரண்டு விதமான மரணம் நேர்ந்தது.ஆவிக்குரியது, மாம்சீகமானது.

ஆவிக்குரிய மரணம் நேர்ந்தபோது கர்த்தருக்கும் மனிதனுக்கும் இடையே பிரிவினை உண்டாயிற்று. ஏனெனில் மகா பரிசுத்தமுள்ள தேவன் பரிசுத்தத்தை இழந்து போன மனுஷனோடு எப்படி இசைவாய் இருக்க கூடும்.மனுஷனுடைய மீறுதலினாலே பரிசுத்த தேவனோடு இருந்த ஐக்கியம் பிளவுபட்டது.

ஆதாம் விழுந்துபோனதினாலே நன்மை, தீமை அறியத்தக்க சாதாரண பாவமனுஷனின் கிரியை மனுக்குலத்தில் வந்தது. குழந்தைகளைக் கூட தவறு செய்யும்படியாக கற்றுக்கொடுக்காவிட்டாலும், அந்த பாவமனுஷனின் சுபாவம் அவர்களை தவறு செய்ய தூண்டுகிறது. சங்கீதம் 51 : 5 ல் சங்கீதக்காரன் தாவீது இதோ நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள் என்கிறார்.நம்முடைய பிறப்பிலிருந்தே வரும் பாவசுபாவத்தையே அவர் கூறுகிறார். அதைதான் ஜென்ம பாவம் என்கிறோம்.


ஏதேன் தோட்டத்திலே ஆதாம் செய்த பாவம் அங்கே தொடங்கி தலைமுறை தலைமுறைக்கும் அது தொடர்ந்தது என்பதிலே பல மதத்தினரிடையே விவாத தர்க்கங்கள் உண்டு.விவாதங்களின் முடிவிலே கவனிக்க வேண்டியது ரோமர் 3 : 23 எல்லோரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களாகி, பாவ மாம்சத்தினாலே கட்டப்பட்டிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் இரத்தமும் பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையும் சகல



**"மரணமாகிய சாபம் இரண்டு விதமானது - ஆவிக்குரியது மாம்சீகமானது. "**


| மரணம் என்கிற சாபம் | தலையங்கம் | வேதபாட வழிகாட்டி முதல்& இரண்டாம் மரணமும் உயிர்த்தெழுதலும் | ஒருநோக்கு செய்தி பக்கம் 5 – 6 கேள்விக்கு என்ன பதில்? | உங்களுக்குத் தெரியுமா? ஏற்றசமயத்தில் ஒரு வார்த்தை |
|---|---|---|---|---|
| பக்கம் - 1 | பக்கம் - 3 | பக்கம் - 4 | பக்கம் - 7 | பக்கம் - 8 |

# வேதாகமம்,




## நமக்கு போதிப்பது என்ன..... ?

**தேவனுடைய வார்த்தை**
2 தீமோ 3:16-17; 2 பேது 1:20-21; மத் 24:35

**அன்பு**
மத் 22:37-40; யோவா 14:21-23, 1 யோவா 4:7-11

**மனந்திரும்புதல்:**
அப் 3:19; 17:30; 2 கொரி 7:10

**புதுசிருஷ்டி**
யோவா 3:3-7; 2 கொரி 5:17; ரோம 6:1-4, எபே 2 :1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**
1 யோவா 5:18; மத் 1:21 ; யோவா 8: 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**
அப் 1:8; 15:8-9; 19:2

**பரிசுத்தம்:**
லூக் 1:73-75; எபி 12:14; 1 பேது 1:15-16; தீத்து 2: 11-12; ரோம 6:22

**தேவனுடைய இராஜ்யம்**
லூக் 17:20-21; ரோம 14:17; யோவா 18:36.

**சபை-** அப் 2:47; எபே 4:4-6; 1 கொரி 12 :12-13; கொலோ 1:18

**ஒற்றுமை**
யோ 17 : 20-23; கலா 3:28; வெளி 18:2-4

**நியமங்கள்**
மத் 28:19-20; 26:26-30; 1 கொரி 11 :23-27; யோவா 13:14-17

**தெய்வீக சுகமளிப்பு**
லூக் 4:18, ஏசா 53 :4,5, யாக் 5 :13-16

**விவாக முறைமை**
மத் 19:5-6; லூக் 16 :18; ரோம 7:2-3; 1 கொரி 7:10, 11

**வெளிப்புற தோற்றம்**
1 தீமோ 2:9-10; 1 கொரி 11 :14-15; உபா 22 :5

**கடைசிகாலம்**
2 பேது 3 : 7-12 ; யோவா 5 :28 ,29; 2 கொரி 5 :10; மத் 25 :31-46

**தொழுதுகொள்ளுதல்**
யோவா 4: 23,24; எபே 5 :19; 2 கொரி 3 :17

**சுவிசேஷம் அறிவித்தல்**
மாற் 16:15

பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரித்து கிறிஸ்துவோடு உள்ள ஐக்கியத்தைப் புதுப்பிக்கும். நன்மை, தீமை அறியத்தக்க மனுஷனானபடியால் இன்னும் பாவம் அவனை மேற்கொண்டு விடுவிக்கப்பட்ட மீட்கப்பட்ட மனுஷர்களை கூட வழி விலகச் செய்கிறது. இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும், எல்லா மனுஷரும் பாவஞ் செய்தபடியால் மரணம் எல்லாருக்கும் வந்தது போலவும் இதுவுமாயிற்று (ரோமர் 5 : 12). ஆதாமுக்கும், ஏவாளுக்கும் தேவன் கொடுத்தது ஆவிக்குரிய மரணம்.



இதனால் பாவமன்னிப்பும், பரிசுத்தமாகுதலுமின்றி என்றென்றுமான பிரிவினை உண்டாயிற்று.உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும், உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது. உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது (ஏசாயா 59 : 2). இந்த மரணசாபம் ஆவிக்குரிய மரணமாக மாத்திரமல்ல, சரீரத்திலும் மரணத்தை ஏற்படுத்துகிறது.

> **“மரணமாகிய சாபம் ஆவிக்குரிய மாத்திரமல்ல மாம்சீகமானது. ”**

மனுஷனுடைய ஆத்துமா அழிவில்லாததாய் இருப்பதால், நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய் என்று கர்த்தர் சொல்கிறார் (ஆதி 3 : 19). இது தேவனுடைய திட்டம் அல்ல, மாறாக ஆதாமின் பாவத்தாலே அவர் மனுஷனை துரத்திவிட்டு, ஜீவ விருட்சத்துக்குப் போகும் வழியை காவல் செய்ய ஏதேன் தோட்டத்துக்கு கிழக்கே கேரூபின்களையும், வீசிக் கொண்டிருக்கும் சுடரொளி பட்டயத்தையும் வைத்தார் (ஆதி 3 : 24).அந்த நாள் முதற் கொண்டு தேவன் ஆதாமையும், ஏவாளையும் தோட்டத்தைவிட்டு துரத்தி, ஜீவவிருட்சத்தை புசிக்க முடியாதபடிக்கு தடை செய்தார்.

ஆகவே அவர்களுடைய சரீரமும் நாளுக்கு நாள் பெலவீனமுள்ளதாகவும், ஒருநாள் அழிந்து போகக்கூடியதாகவும் மாற்றம் பெற்றது.அந்த ஜீவவிருட்சத்தின் கனியானது சரீரத்தின் தன்மையை அழியாதபடி காக்கக்கூடியது.ஆதாமுடைய பாவத்தாலே மனிதனுடைய வாழ்நாள் இந்த பூமியில் மிகவும் குறுகியதாகிவிட்டது.பாவத்தினால் மனிதனுக்கு இரண்டுவிதமான மரணங்கள் வந்தடைந்தது. பாவத்தின் சம்பளம் மரணம் (ரோமர் 6 : 29) என்று வேதம் கூறுகிறதல்லவா. அந்தத்தினால் அடைந்த ஆவிக்குரிய மரணம் நம்முடைய ஆத்துமாவை தேவனிடத்திலிருந்து பிரிக்கிறது.சரீரத்தின் பெலவீனங்களும், மனிதனுடைய பாவங்களும் சரீரப்பிரகாரமான மரணத்தை பிறப்பிக்கிறது. மரணம் என்பது ஒன்றே.மாம்சீக மரணமானது சரீர ரீதியான செயல்களை நிறுத்திவிடச் செய்கிறது.அதுபோலதான் ஆவிக்குரிய மரணம் தேவனிடத்திலிருந்து நம்மைப் பிரித்துவிடுகிறது. ■

*கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம். எங்களுடைய இதழை ஆன்லைனில் படிக்க* **www.thegospeltruth.org** *என்ற இணையதள முகவரியை பார்க்கவும்.உங்களது கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் தெரிந்த விசுவாசிகளுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள்.*

*படங்கள் அனைத்தும் அனுமதியோடே அச்சிடப்பட்டுள்ளது. உங்கள் கருத்துக்களையும் நன்கொடைகளையும் அனுப்பவேண்டிய முகவரி :-*

**டபிள்யூ.எஸ்.வேதா, காஸ்பெல் ட்ருத், 2/227 கோலார்பட்டி, பொள்ளாச்சி வட்டம், தென் இந்தியா - 642 107**

# Editorial
# ஆசிரியரின் தலையங்கம்

மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று – 1கொரி 15 : 21.

ஆதாமின் பாவத்தால் மனுக்குலத்தின்மீது மரணம் என்கிற பாவம் ஆண்டுகொண்டது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.இயேசுகிறிஸ்து தம் மரணத்தினால் வெற்றி சிறந்தார்.மரணம் என்பது ஆதாமால் வந்தது.ஆனால் நித்தியஜீவனோ கிறிஸ்துவால் வந்தது. பாவமும், மரணமும் ஒருக்காலும் மனுக்குலத்தின்மேல் அதிகாரம் செலுத்த முடியாது.ஏனெனில் இயேசுகிறிஸ்துவின் மரணமும் உயிர்த்தெழுதலும் அந்த சாபத்தை முறியடித்தது.

இந்த இதழில் முதலாம் மற்றும் இரண்டாம் மரணத்தையும், உயிர்த்தெழுதலையும் குறித்து பார்க்க இருக்கிறோம். நான் அதிகமதிகமாக இந்த தலைப்பைக் குறித்து ஆராய்ந்து, தியானித்து, ஜெபத்தோடு எழுதியுள்ளேன்.இதைக் குறித்த பல தவறான போதனைகள் கிறிஸ்தவர்களிடையே இருப்பினும் சரியான ஒன்றை நாம் தியானிப்போம். நமது தேவசபையின் முந்தைய பல பத்திரிகைகளிலும், புத்தகங்களிலும் நான் கண்ட அர்த்தங்களும், கொள்கைகளும் கூட சில இடங்களில் மாறுபட்ட கருத்துடையதாகவே இருந்தது.சில சகோதரர்கள் முதலாம் மரணம் என்பது சாதாரணமான மனிதனின் இறப்பு என்றும் அதேசமயம் இன்னும் சிலர் ஏதேன் தோட்டத்தில் நடந்ததே ஆவிக்குரிய மரணம் என்றும் கருதுகின்றனர்.இரண்டு விதமான போதனைகளையும் வேதாகமத்தின் அடிப்படையில் நாம் மீண்டும் தியானிப்போம்.

முதலாவது மரணம் என்று தேவன் கூறியது.கீழ்ப்படியாமைக்கான தண்டனையாக வேதம் கூறுகிறது. ஒரே வார்த்தையிலே மாம்சீக மற்றும் ஆவிக்குரிய மரணங்களும் அடங்கியுள்ளது. இயேசுகிறிஸ்து முதலாம் மற்றும் இரண்டாம் உயிர்த்தெழுதல் என்கிற இரு காரியங்களினாலே சாபத்தினின்று நம்மை விடுதலையாக்கினார்.


இந்த இதழில் கூறப்பட்டுள்ள வேதசத்தியங்கள் எனக்கு மிகவும் உந்துதலாகவும் அமைந்தது. நியாயத்தீர்ப்பிலே அவிசுவாசிகளுக்கு வரப்போகிற மரணம் என்கிற ஆக்கினைத்தீர்ப்பை குறித்து மிகவும் எச்சரிக்கையாயிருக்கவும், கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய உயிர்த்தெழுதலை அடையவும் அவர்தாமே இதை வாசிக்கிற ஒவ்வொருவரோடும் பேசுவாராக.அவ்வாறு கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய உயிர்த்தெழுதலை அடைந்த அனைத்து தேவபிள்ளைகளும் நரகத்தின் ஆக்கினைக்கு நீங்கலாயிருப்பார்கள்.

**ஆன்லைனில்**

**அதிகமாக தெரிந்துகொள்ள**

*www.thegospeltruth.org*

### 1 வது & 2வது மரணமும் 1&2வது உயிர்த்தெழுதலும்



# வேதபாட வழிகாட்டி

## முதல் மற்றும் இரண்டாம் மரணமும் உயிர்த்தெழுதலும்

**வேத வாசிப்பு :** முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான் வெளி 20 : 6

**செய்திச் சுருக்கம் :** ஏதேன் தோட்டத்திலே ஆதாம் செய்த பாவத்தினாலே மனுக்குலத்தின் மேல் மரணமாகிய சாபம் வந்தது. இதுவே முதல் ஆவிக்குரிய மற்றும் மாம்சீக மரணம்.இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்து மரித்து, உயிர்த்தெழுந்ததினாலே மனுக்குலத்தின் இரண்டுவிதமான பாவங்களுக்கு தீர்வு தேவைப்பட்டது. முதலாவது உயிர்த்தெழுதலானது ஆவிக்குரிய உயிர்த்தெழுதல் அது இரட்சிப்பினால் கிடைக்கப்பெற்றது. இரண்டாவது உயிர்த்தெழுதலானது வார்த்தையின் அடிப்படையிலான, மாம்சீகமான உயிர்த்தெழுதல் அது உலகத்தின் முடிவிலே நடைபெறும்.



**I.ஏதேன் தோட்டத்தில் தோன்றிய பாவம்**

A.ஆதி 2 : 9 ஏதேன் தோட்டத்திலே இரண்டு விதமான சிறப்பான மரங்கள் இருந்தது.

B.ஆதி 2 : 16-17 இரண்டு மரங்களிலும் காணப்படும் நன்மையும், தீமையும்

**II.இரண்டுவிதமான மரணம்**

A.ரோமர் 5 : 12 ஆதாம் என்கிற ஒரே மனுஷனாலே பாவம் உலகத்திலே பிரவேசித்தது.

B.ஆதி 3 : 19 மாம்சீக மரணம்

C.ஆதி 3 : 22, 24 ஆதாம் ஜீவ விருட்சத்தின் வாழ்வில் இருந்து துரத்தி விடப்பட்டான்.

D.ரோமர் 6 : 23 பாவத்தின் சம்பளம் மரணம்

E.ஆதி 3 : 6-7 பாவத்தின் மூலமாக கர்த்தர் தந்த மகிமையின் தன்மையை இழந்துபோனார்கள்

F.சங் 51 : 5 துர்க்குணத்தில் உருவான மனிதன்

G.ஏசா 59 : 2 உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது.

**III. ஆவிக்குரிய மரணமும் & உயிர்த்தெழுதலும்**

A.லூக் 15 : 24 கெட்டகுமாரன்

B.யோவான் 5 : 24-25 மரணத்தைவிட்டு நீங்கி,ஜீவனுக்குட்பட்டிருக்கிறான்.

C.எபேசி 2 : 1, 5-6 அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மை கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார்.

D.ரோமர் 5 : 8-21 ஆதாம் என்கிற ஒரே மனுஷனால் பாவம் இவ்வுலகில் பிரவேசித்தது. இயேசுகிறிஸ்துவினால் இரட்சிப்பாகிய மீட்பு உண்டாயிற்று.

E.யோவான் 11 : 25-26 நானே உயிர்த் தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்.

**IV.மாம்சீக மரணமும் உயிர்த் தெழுதலும்**

A.யோவான் 5 : 28-29 மரித்தோர் யாவரும் எழுந்திருப்பார்கள்.

B.1 கொரி 15 : 26 பரிகரிக்கப்படுங் கடைசி சத்துரு மரணம்

C.1 கொரி 15 : 42-57 மரித்தோரின் உயிர்த்தெழுதல்

**V.இரண்டாவது மரணம்**

A.வெளி 20 : 12-15 மரணமும் பாதாளமும் அக்கினிகடலிலே தள்ளப்பட்டன.இது இரண்டாம் மரணம்.

B.மத் 22 : 13 அழுகையும், பற்கடிப்பும் உண்டாயிருக்கும்

C.லூக் 16 : 23-24 நரகம் அக்கினி ஜ்வாலையின் வேதனை

D.மாற் 9 : 43-44 நரகத்திலே அக்கினி அவியாமலிருக்கும்.

**VI.இரண்டாம் மரணத்தில் பங்கடைபவர்கள்**

A.வெளி 21:8 அருவருப்பானவர்கள்

B.வெளி 2 : 11 ஜெயங்கொள்ளுகிறவன் இரண்டாம் மரணத்தினால் சேதப்படு வதில்லை

C.வெளி 20 : 6 பரிசுத்தவான்கள் மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகார மில்லை.

**முடிவு :**

ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக் கடவன்; ஜெயங்கொள்ளுகிறவன் இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை என்றெழுது - வெளி 2 : 11.

# முதல் மற்றும் இரண்டாம் மரணமும் உயிர்த்தெழுதலும்

**ஏதேன் தோட்டத்திலே கீழ்ப்படியாமை என்கிற பாவத்தினால் வந்த தண்டனையே மரணம்." முதல் மரணம் " என்பது ஆவிக்குரிய மற்றும் சரீரப்பிரகாரமான மரணத்தின் தன்மையைக் குறித்து கூறுகிறது.மரணம் என்பது தற்காலிகமானது என்று ஏன் சொல்லப்படுகிறது எனில் ஒருநாள் இயேசுகிறிஸ்துவினாலே உயிரோடு எழுப்பப்பட்டு அவருக்குள் மீண்டும் உயிர்பெற்று ஆத்துமா தேவனோடு ஐக்கியப்படும்.ஆகவேதான் அதனை தற்காலிகமான இழப்பாகவே கருதலாம். இரண்டுவிதமான மரணங்களிலிருந்தும் தேவன் நம்மை மீட்டெடுப்பார்.ஆகவே இரண்டுமே தற்காலிகமானதே.**



**இயேசுகிறிஸ்து தாம் ஏற்றுக்கொண்ட மரணத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பை ஆவிக்குரிய மரணத்தால் நாம் பெறும்படியாக தந்திருக்கிறார்.**

**முதலாவது உயிர்த்தெழுதல்**

முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள் மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை (வெளி 20 : 6). முதலாம் உயிர்த்தெழுதலானது ஆவிக்குரிய உயிர்த்தெழுதல்.அதாவது ஒரு பாவி தன் பாவத்தைவிட்டு மனந்திரும்பும்போது இயேசு கிறிஸ்துவுக்குள் உயிர்த்தெழுதலை அடைகிறான்.இதனை இயேசுகிறிஸ்து தன் தகப்பனை விட்டுப் பிரிந்துபோன கெட்டகுமாரன் உவமையின் மூலமாக விளக்குகின்றார்.கெட்டகுமாரன் மனந்திரும்பி, தன் தகப்பனிடத்திற்கு வந்தபோதோ தகப்பன் மிகவும் சந்தோசப்பட்டு, என் குமாரனாகிய இவன் மரித்தான், திரும்பவும் உயிர்த்தான்; காணமற் போனான்.

திரும்பவும் காணப்பட்டான் (லூக் 15 : 24) என்றார். அவருடைய மகன் மாம்சீகமாக மரணிக்கவில்லை. ஆனால் ஆவிக்குரிய மரணத்திற்குள்ளாக்கப்பட்டான்.அவன் பாவத்தைவிட்டு மனந்திரும்பியபோதோ மீண்டும் உயிரடைந்தான்.அதுபோலதான் ஆவிக்குரிய மரணமும் ஆவிக்குரிய உயிர்த்தெழுதலினாலே உயிர்மீட்சி அடைகிறான்.

என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல் , மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட் பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (யோவான் 5 : 24-25).இங்கே இயேசு சரீரப்பிரகாரமான மரணத்தையோ, உயிர்த்தெழுதலையோ குறிப்பிட வில்லை.மாறாக ஒரு பாவி மனந்திரும்பி, தேவனிடத்தில் ஒப்புரவாகுவதைக் குறித்தே கூறியிருக்கிறார். அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார். (கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்).கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங் காலங்களில் விளங்கச் செய்வதற்காக கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார் (எபேசி 2 : 5-6).

**ஆவிக்குரிய மரணம்**


ரோமர் 5 : 8-21 உரக்கச் சொல்வது யாதெனில் ஆதாம் என்கிற ஒரே மனுஷனுடைய மீறுதலினாலே நம்மேல் மரணம் என்கிற ஆக்கினை வந்தது.ஆனால் ஜீவனுக்கேதுவான மீட்பு இயேசுகிறிஸ்துவினாலே உண்டானது. தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து வினாலே மனுக்குலத்தோடு இருந்த பிரிவினை ஒப்புரவாக்கப்பட்டது.இயேசு நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்.உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்.இதை விசுவாசிக்கிறாயா என்றார் (யோவான் 11 : 25-26).

ஞானஸ்நானத்தின் வாயிலாக இது விளக்கப்பட்டுள்ளது.அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத் தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம் (ரோமர் 6 : 4-5). இயேசுகிறிஸ்துவின்இரத்தத்தால் மீட்கப்பட்டோர் உயிர்த்தெழுந்தோராக எண்ணப்படுவதின் அடையாளமே ஞானஸ்நானம். பாவமனுஷனிலிருந்து விடுதலையடைந்து கிறிஸ்துவுக்குள் புதுவாழ்வைப் பெறுவது ஆவிக்குரிய உயிர்த்தெழுதல் இதுவே முதலாம் உயிர்த்தெழுதல்.

**இரண்டாம் உயிர்த்தெழுதல்(மாம்சீகம்)**

முதலாவது மரணமாகிய சரீரப்பிரகாரமான மரணத்தின் இரண்டாவது பகுதியை காணலாம். ஆத்துமாவானது முதலாவது உயிர்த்தெழுதலின் வாயிலாக உயிர்மீட்சி பெறுகிறது.அதேபோல் சரீரமானது இரண்டாம் உயிர்த்தெழுதலின்போது உயிரடைகிறது.

பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்; அப்பொழுது நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர் களாகவும் புறப்படுவார்கள் (யோவான் 5 : 28–29). ஆகவே சரீரப்பிரகாரமான உயிர்த்தெழுதல் வருங்காலத்தில் நிகழக்கூடியது. பரிகரிக்கப்படுங் கடைசி சத்துரு மரணம்(1கொரி 15 : 26). இயேசுகிறிஸ்து தாமே மரித்து, உயிர்த்ததினாலே, மரணத்தை வெற்றி சிறந்தார்.இயேசுகிறிஸ்து திரும்ப வரும்போது, அவருடைய நியாயாசனத்திற்கு முன்பாக எல்லோரும் நிற்க வேண்டும். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக் கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது (1 கொரி 15 : 42–57).



**நித்திய அழிவுக்குள்ளாக்கும் இரண்டாம் மரணம் ஒன்று தேவனிடத்திலிருந்து வருகிறது. இதிலிருந்து தப்பித்துக் கொள்ளும்படியான எந்தவொரு வழிவகையும் என்றென்றும் இல்லை.**

மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று.ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள் (1 கொரி 15 : 21–22). இந்த சரீரப்பிரகாரமான உயிர்த்தெழுதலே இரண்டாம் உயிர்த்தெழுதல்.ஆதாம் முதற்கொண்டு மரணமானது மனுஷனின் தலையின் மேல் குடையை போன்று சூழ்ந்து கொண்டுள்ளது. ஆனால் கிறிஸ்துவின் வழியாக இரண்டுவிதமான உயிர்த்தெழுதல் உண்டாயிற்று.அதுவே முதலாம் மரணத்தை அழிக்கும் வல்லமை உடையது. முதலாவது இரட்சிப்பு எனும் உயிர்த்தெழுதல் இரண்டாவது மரித்த சரீரத்தினின்று உயிரோடு எழுப்பப்படுதல்.

**இரண்டாவது மரணம் நித்தியமானது**

முதல் மரணம் தற்காலிகமானது.ஏனெனில் இயேசுகிறிஸ்துவின் கிருபையினாலே மீட்கப்படும் வல்லமை கிரியை செய்கிறது.அதுவே இரண்டாம் மரணம் என்பது கடைசியும், நித்தியமுமானது.இந்த இரண்டாம் மரணத்திலிருந்து தப்பித்துக்கொள்ளும் வழி இல்லை.

மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக் கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவபுஸ்தகம்  என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத் தக்கதாக நியாயத்தீர்ப் படைந்தார்கள்.சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது. மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன.யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத் தீர்ப்படைந்தார்கள்.அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினிக்கடலில் தள்ளப்பட்டன.இது இரண்டாம் மரணம்.ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான் (வெளி 20 : 12–15).இந்த இரண்டாம் மரணமானது தேவனிடத்திலிருந்து நித்திய நித்திய காலமாக ஒருவனைப் பிரித்து அழுகையும், பற்கடிப்புமுள்ள புறம்பான இருளிலே போடத்தக்கது.இந்த இரண்டாம் மரணமானது இயேசுகிறிஸ்துவின் வல்லமையால் முதல் மரணத்திலிருந்து மீட்கப்பட்டோருக்கு பாதிப்பை ஏற்படுத்தாது. கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படும் எல்லோரும் நியாயந் தீர்க்கப்படுவார்கள்.

நரகமானது அக்கினி ஜீவாலையின் வேதனை நிறைந்த இடம் (லூக் 16 :23–24).அது அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற புறம்பான இருள் (மத் 22 : 13).மேலும் அங்கே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும் (மாற்கு 9 : 43–44). இரண்டாம் மரணத்தில் பங்கடைந்தோருக்கு நித்திய நித்தியமான வேதனையே நிலைத்திருக்கும். வேதனைக்கு முடிவேயிராது. இன்னொரு இரட்சகரோ மீட்பரோ இல்லை.

தேவனுடைய ஜனமல்லாதோரும், மீட்கப்படாத வர்களும் என்றென்றுமான நித்தியமான இரண்டாம் மரணத்திற்கு ஒப்புவிக்கப் படுவார்கள்.பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபச்சாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார் (வெளி 21 : 8).

**இரண்டாம் மரணத்திற்கு தப்புவிக்கப்படும்படி இரட்சிக்கப்படுவோம்**

இயேசுகிறிஸ்துவின் மூலமாக பெறப்பட்ட விடுதலையினாலே நாம் இரண்டாம் மரணத்தினின்று மீட்கப்பட்டோம்.ஆதாமுடைய பாவத்தினாலே மனுக்குலத்தின்மீது வந்த சரீரப்பிரகாரமான மற்றும் ஆவிக்குரிய மரணமானது இயேசுகிறிஸ்து மரித்து உயிர்த்ததின் வல்லமையினாலே விடுதலையாக்கப்பட்டு விட்டது.ஆவிக்குரிய உயிர்த்தெழுதலை முதலாம் மரணத்தின் வாயிலாக பெற்றவர்கள் இரண்டாம் மரணமாகிய யுகாயுகமான நித்திய அழிவுக்குப் பயப்பட வேண்டியதில்லை.பங்கடைய வேண்டியதில்லை.முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான் (வெளி 20 : 6).

இயேசுகிறிஸ்துவின் விலையேறப்பெற்ற மீட்பின் ஈவினால் முதலாம் மரணத்தை அடைந்து உயிர்த்தெழுந்தோர் இரண்டாம் மரணத்திற்கு முற்றிலுமாக நீங்கலாக்கப் பட்டவர்கள்.ஆகவே பாவிகளாகிய நாம் ஒருவிசை மனந்திரும்பி, தேவனோடு உள்ள உறவில் ஒப்புரவாகி, இரட்சிப்பை பெற்றுக் கொள்வோம். பிதாவுக்கேற்ற பரிசுத்தத்திலும் இயேசுகிறிஸ்து காட்டிய வழியிலும் அனுதினமும் நடப்போம்.முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கெடுத்து ஜீவவாழ்வை பெற்றவர்களுக்கென்று ஆயத்தமாக்கப் பட்டிருக்கும் மகா அதிசயமான பரலோக வாழ்வுக்கு ஆயத்தமாவோம்.அதுவே நிச்சயம். ஜெயங்கொள்ளுகிறவன் இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை (வெளி 2 : 11). ■

# கேள்விக்கு என்ன பதில்?

**1 தெச 4 : 13-18 போதனையின்படி கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள் என்று சொல்லப்பட்டுள்ளதால் நீதியுள்ளவர்களும், அநீதியுள்ளவர்களும் வேறு வேறு காலங்களிலா எழுப்பப்படுவார்கள்? அப்படியானால் இரண்டு விதமான சரீர உயிர்த்தெழுதல் நடைபெறுமா?**

கல்லறையிலிருந்து உயிரோடு எழுப்பப்படுதல் என்பது ஒரேயொரு முறைதான்.யோவான் 5 : 28-29 ல் தெளிவாக கூறப்பட்டுள்ளது.இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம். ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்; அப்பொழுது நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர் களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கி றவர்களாகவும் புறப்படுவார்கள். நல்லோரும், தீயோரும் ஒரே சமயத்தில் எழுந்திருப்பார்கள்.இதிலும் சில தர்க்கங்களும், கருத்து வேறுபாடுகளும் சபைகளுக்கிடையே உண்டு.
1 தெச 4 :16 சொல்கிறது யாதெனில் கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள் (வசனம் 17) பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம் என்பதிலிருந்து தேவனுடைய பரிசுத்தவான்களுக்கு கர்த்தர் வரும்போது என்ன நடக்கும் என்பதை தெரிவிக்கிறது. யோவான் 5 , 1 தெச 4 : 13-18 இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர் களையும் தேவன் அவரோடே கூட கொண்டுவருவார் (13) ஆகையால் இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள் (18).

இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது சகல உலகத்தா ருக்குமான ஒரே உயிர்த்தெழுதல் நடைபெறும்.

**வெளி 20 : 5-6 வசனங்களில் சொல்லப்பட்டுள்ள ஆயிரம் வருஷம் குறித்து விவரித்துச் சொல்லுங்கள்.**
மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை. இதுவே முதலாம் உயிர்த்தெழுதல். முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமா யிருக்கிறான்; இவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து அவரோடே கூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள் (வெளி 20 : 5-6).

யோவான் 5: 24-29 ல் இரண்டு விதமான உயிர்த்தெழுதலைக் குறித்து காணமுடிகிறது. முதலாவது ஆவிக்குரியது (கேட்குங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது) இரண்டாவது சரீரப் பிரகாரமானது (வருங்காலத்தில் நடக்கும்).

இப்போது வெளி 20 : 5-6 வசனத்தை குறித்து பார்ப்போம்.

அந்த வசனங்களில் சொல்லப்பட்டுள்ள உயிர்த்தெழுதலானது, சரீரப்பிரகாரமான தல்ல, மாறாக ஆதி திருச்சபை மற்றும் சீர்திருத்த திருச்சபைகளின் ஆதிக்கத்தின் போது இயேசுவைப்பற்றிய சாட்சியினிமித்தம் இரத்தசாட்சியாய் மரித்தோரின் ஆத்தும உயிர்த்தெழுதலைக் குறித்துச் சொல்லப்பட்டுள்ளது. ஒருபோதும் பூமிக்குரிய ஆயிரம் வருஷ அரசாட்சியைக் குறித்து கூறப்படவில்லை.வசனம் 4ல் இயேசுவைப்பற்றிய சாட்சியினிமித்தம் சிரச்சேதம் பண்ணப்பட்டவர்களுடைய ஆத்துமாக்கள் என்று சொல்லப்பட்டுள்ளது இரத்தசாட்சிகளின் ஆத்துமாக்கள்.ஆகவே அது மாம்சீகமான அவர்களுடைய சரீர உயிர்த்தெழுதல் அல்ல.பரலோகத்தில் ஆளுகை செய்யும் தேவனுடைய இரத்த சாட்சிகள்.இந்த ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக அல்லது குறிப்பிட்ட அடையாளமாகச் சொல்லப்பட்ட ஆண்டுகளுக்கு முன்பதாக விடியற்கால சபை இந்த பூமியிலே வெற்றிசிறந்ததாக பார்க்கப்பட்டது.விசுவாசதுரோகம் நேர்ந்தபோது அந்த சபை தவறானதாக கருதப்பட்டது.பூமியிலே இவ்வாறாக சொல்லப்பட்ட ஒரு சபையானது பரலோகத்தில் ஆளுகை செய்ததற்கான வெளிப்பாடு கொடுக்கப்பட்டது.அந்த சபையில் இரத்தசாட்சியாய் மரித்த ஆத்துமாக்கள் இந்த பூமியில் வாழ்ந்தபோது முதலாவது மனந்திரும்பி, இரட்சிக்கப்ட்டு முதலாம் உயிர்த்தெழுதலை அடைந்ததால் தான் பரலோகத்தில் ஆளுகை செய்ய முடிந்தது.

கடந்தகாலங்களில் இரத்தசாட்சியாய் மரித்த யாவருக்கும் முதலாம் உயிர்த்தெழுதல் வெளிப்படையாக தெரியாவிட்டாலும், இந்த உயிர்த்தெழுதலின் பேரில்தான் அவர்களுடைய ஆத்துமாக்கள் கிறிஸ்துவோடு ஆளுகை செய்யும் பாக்கியம் பெற்றது. ஆகவேதான் இரண்டாம் மரணம் அவர்களை ஆண்டுகொள்ளவில்லை.ஆயிரம் வருஷமோ அல்லது அந்த குறிப்பிட்ட அடையாளமான நாட்கள் நிறைவேறியபிறகு மீண்டும் அந்த சபை இந்த பூமியிலே ஜெயம் பெற்று, வெற்றிசிறந்த சபையாக காணப்படும்.




**Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide**
**Indian Constitution Act 25th & 19(1) Section**

**TAMIL EDITION - FOR PRIVATE CIRCULATION ONLY**



உங்களுக்குத் தெரியுமா?



*வெளி 22 : 1–2 ல் நதியின் இரு கரையிலும், ஜீவவிருட்சம் இருந்தது.அது தேவனுடைய சிங்காசனத்திற்கு அருகில் இருந்தது என்று சொல்லப்பட்டுள்ளது.வசனம் 3ல் இனி ஒரு சாபமுமிராது. தேவனுடைய பிள்ளைகள் அந்த கனியைப் புசிக்கலாம். அங்கே ஆவிக்குரிய மரணம் இல்லை.நதியின் இன்னொரு புறம், நித்தியமான ஜீவவிருட்சம் வளர்ந்து வருவதன் அடையாளம் விடுவிக்கப்பட்ட ஜனங்கள் ஆட்டுக்குட்டியானவரின் சமுகத்தில் நித்தமும் இளைப்படைவதைக் குறிக்கிறது.*

*ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை*

## நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்!

இதோ ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்.நாமெல்லாரும் நித்திரை அடைவதில்லை. ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம் – 1கொரி 15 : 51.



அப்போஸ்தலனாகிய பவுல், கொரிந்து பட்டணத்திலுள்ள பரிசுத்தவான்களுக்கு எழுதுகிறார். கிறிஸ்துவினுடைய வருகையின்போது சிலர் மரித்திருப்பார்கள்.பலர் வாழ்ந்து கொண்டிருப்பார்கள். ஆகவே இயேசுகிறிஸ்து வரும்போது ஒரு இமைப்பொழுதில் எக்காளம் தொனிக்கும்போது, மரித்தோர் அழிவில்லாத வர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம் (1 கொரி 15 : 52). தேவஜனமே! மறுரூபமாக்கப்படும் வேளை வரும்!

நம் சரீரம் அழிவுக்கேதுவானது.சரீரமானது அழிந்து மண்ணுக்கே திரும்புகிறது.ஏதேன் தோட்டத்தில் விளைந்த சாபத்தினால் மனுக்குலத்தின்மேல் வந்த சாபம் அது.சாபமானது தேவனுடைய பரிசுத்தவான்களுக்கு தற்காலிகமானது.இயேசு மரணத்தை ஜெயித்து சாபத்தின் வல்லமையை முறியடித்தார்.இயேசுவுக்கே துதியும் மகிமையும் உண்டாகட்டும்

மறுரூபமாக்கப்படுதல் ஒரு இமைப்பொழுதினில் மகிமையாய் நடைபெறும்.இறந்துபோன சரீரத்தை எழுப்புகிற தேவன், உயிரோடிருக்கிறவர்களும் என்றென்றும் அழியாதபடிக்கு மறுரூபமாக்கப்படுகிறோம்.சரீரப்பிரகாரமான மரணம் மாற்றப்பட்டு புதிதாக்கப்படுகிறது.

நம்முடைய அழிவுக்கேதுவான சரீரம் தேவன் நமக்கென்று ஏற்படுத்திய மகிமையான பரலோகத்திற்கு உகந்ததல்ல.ஆகவே அந்த பரலோக வாழ்வை நித்திய காலமாக அனுபவிக்க கூடியவகையில் நம்மை ஆயத்தம் பண்ண தேவன் திட்டம் பண்ணுகிறார். இந்த மறுரூபமாக்கப்பட்ட சரீரம் நித்தியஆவியின் உறைவிடம், மீண்டும் ஒருபோதும் அழிவுக்குள்ளாக்கப்படாது.

வாழ்வின் எல்லா தருணங்களிலும், ஏன் மரணத்திலும் கூட அஞ்ச வேண்டாம்.நீங்கள் இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு, இரட்சிக்கப்பட்டுவிட்டால் அந்த நாளில் மறுரூபமாக்கப்படுவீர்கள். ■

**CONTACT :-**

**The Editor,**
**Gospel Truth,**
**P.O. Box - 54**
**Pollachi Town**
**INDIA - 642 001.**

**Email :**
**editor@thegospeltruth.org**

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

**THE CHURCH OF GOD** *Worship Place:*

**Church Street, Kolarpatti, Pollachi-Taluk - 642 107**

**தேவசபை** ஆராதனை நடைபெறும் இடம் :

**சர்ச் தெரு, கோலார்பட்டி, பொள்ளாச்சி - தாலுகா - 642 107**

SUNDAY SERVICE : 10 AM - **ஞாயிறு ஆராதனை : காலை 10 மணி**

எந்த ஆலயத்திற்கும் செல்லாமல் இருப்பவர்கள் எங்களுடன் பரிசுத்தஆராதனையில் கலந்துகொள்ள அழைக்கின்றோம்.

Come & Worship with us on Real Truth   Phone (**போன்**) : 9597562641

**Tamil Editor : W.S.VEDHA, THE CHURCH OF GOD, 2/227 -KOLARPATTI, POLLACHI TALUK, SOUTH INDIA - 642 107. Phone : 04259 - 280488 Cell : 95975 62641.**
**Team : V.Selvam, V.Jayanathan Gnanarajan, J.Grace Johnsy, V.J.Sam kirubaharan**
**Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316**